# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.85 /2019

Deposition of DW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 04.04.2024

Evidence Recorded Time: 11.55 A.M to 12.10 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஆறுமுகம் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | கருப்புசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சா..சா.ஆ.1 கிரைய ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் கமலா, மூர்த்தி, சேசாயி ஆகியோர்கள் அறிவுகொடிக்கு கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் அறிவுகொடி பவர் ஏஜென்ட் நிலையில் துரைசாமிக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தின் நகலை இத்துடன் கொண்டு வந்துள்ளேன். 08.10.1999 தேதியிட்ட பொது அதிகாரப்பத்திரம் சா.சா.ஆ.2 ஆகும். மேற்படி பொது அதிகாரப்பத்திரம் பதிவு செய்யும் போது அறிவுக்கொடிக்கு பவர் கொடுத்த நபர்கள் உயிரோடுதான் இருந்தார்கள் என்பதற்கு எங்களிடம் ஏதேனும் ஆவணம் கொடுத்தார்களா என்றால் 2013 க்கு முன்பு வரை முதல்வர்கள் உயிரோடு உள்ளார்களா என்பதற்கு ஆவணம் தேவையில்லை. வா.சா.ஆ.1 02.12.2009 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை</u> –

வா.சா.ஆ.1 ஆவணமானது அறிவுக்கொடி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட முறையான பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் துரைசாமிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அறிவுக்கொடிக்கு எந்த சொத்தை கொடுத்து பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் வீரக்கல் புதுர் கிராமம் ச.எண்.37/1டி1, பழைய ச.எண்.37/1ல் மொத்தம் 1 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் 0.16 ஏர்ஸ் நிலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதே பவர் இருக்கும் நிலையில் தான் அறிவுக்கொடி வாதி பெயருக்கு வா.சா.ஆ.1 ஆவணப்படி 1091.25 சதுரடி நிலத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் சரியான முறையில் தான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

ஒம்/–DW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.